**செய்தி வெளியீடு எண்:636** **நாள்:20.10.12**

# பத்திரிக்கை செய்தி

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் அனைத்து பணியிடங்களையும் நிரப்பிட துரித நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியன்பேரில் தற்பொழுது ஆசிரியர் பணியிடங்கள் விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
- 15.09.2012 அன்று 1080 முதுகலை பாட ஆசிரியர் பணியிடங்கள் (Online) இணையதளம் மூலம் நிரப்பப்பட்டுள்ளன
- 10.10.2012 அன்று 184 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (Online) இணையதளம் மூலம் நிரப்பப்பட்டுள்ளன
- 15.10.2012 அன்று 143 மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான பணியிடங்கள் முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் (Online) இணையதளம் மூலம் நிரப்பப்பட்டுள்ளன
- நேற்றும் இன்றும் (19.10.2012 மற்றும் 20.10.2012) 445 அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான பணியிடங்கள் முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையில் (Online) இணையதளம் மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாநிலம் முழுவதும் உள்ள இப்பதவிக்கு முன்னுரிமை பட்டியலில் இருந்து ஆசிரியர்கள் இணையதளம் மூலம் பதவி உயர்வு வழங்கப்பட்டது.
- கடந்த காலங்களில் இது போன்ற கலந்தாய்வுகள் சென்னையில் நடைபெறும். அப்பொழுது மாநிலம் முழுவதும் உள்ள ஆசிரியர்கள் சென்னைக்கு வந்து ஓரிரு நாட்கள் சென்னையில் தங்கி பணியிடங்களை தேர்வு செய்வர். பிறகு பள்ளியில் சேரும்பொழுது அவர்களுக்கு வசதியின்றி இருந்தால் அவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட பதவி உயர்வினை தற்காலிகமாக துறப்பு செய்வார்கள். பிறகு அப்பணியிடங்களை நிரப்புவதற்கு மீண்டும் இது போன்ற கலந்தாய்வு நடத்தப்படவேண்டும். அதனால் எந்த ஒரு ஆண்டிலுமே அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்கள் முழுமையாக நிரப்பப்படாத நிலை இருந்தது.
- ஆசிரியர்களின் சிரமத்தை குறைக்கும் வகையிலும் அவர்களுக்கு எவ்வித பொருள் செலவும் ஏற்படாமல் அவர்கள் பணிபுரியும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திலேயே கலந்தாய்வு நடத்தப்பட்டது. அவர்களுடைய முன்னுரிமைப்படி இணையதளம் மூலமாக அவர்களுக்கு விருப்பமான பள்ளிகளை தேர்வு செய்து உடனேயே பதவி உயர்வுக்கான ஆணையும் வழங்கப்பட்டது.
- அந்த மாவட்டத்திற்குள்ளேயே அவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்பட்சத்தில் அவர்கள் அன்றே பணியில் சேரவும் அனுமதிக்கப்பட்டது. அவர்களுக்கு விருப்பமான பள்ளி கிடைக்காத நிலையில் அவர்கள் பதவி உயர்வு வேண்டாம் என கூறும்பொழுது உடனடியாக அடுத்தவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. இதன்மூலம் அனைத்து பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுவிட்டன. முற்றிலும் ஒளிவு மறைவற்ற முறையில் ஒருவர் தேர்வு செய்யும் பணியிடத்தை மமறறவர்களும் அறிந்து கொள்ளத்தக்க வகையில் அமைந்தது அனைத்து வகை ஆசிரியர்களிடமும் வரவேற்பையும் பாராட்டுதலையும் பெற்றுள்ளது.
- தற்பொழுது ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள 1023 உடற்கல்வி ஆசிரியர்கள் உட்பட சிறப்பாசிரியர்கள் பட்டியலில் உள்ள நாடுநர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு மாவட்டங்களிலிருந்து காலிப் பணியிடங்கள் பெறப்பட்டு மாநில அளவில் இணையதளத்தின் வழியாக கலந்தாய்வு மூலம் பணி நியமன ஆணைகள் வழங்கப்படும்.

பள்ளிக் கல்வி இயக்குநர்
சென்னை–600 006

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**